1987 மே 5]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சங்கங்களிலே ஓவர்டியூ இல்லாமல் இருந்தால் அந்தச் சங்கங்களிலே மனுச் செய்பவர்களுக்கு உடனடியாக கடன் வழங்கப்படுகிறது.

சைதையில் ஆற்றுநகர், திடீர் நகர் மற்றும் கோதாமேடு ஆகிய பகுதிகளில் குடிசை வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகள்

600—(*வினா எண் 8699) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை ஆற்று நகர், திடீர் நகர், கோதா மேடு ஆகிய பகுதிகளில் "தீ பிடித்த குடிசை வீடுகளுக்கு பதிலாக" மாடி வீடுகள் கட்டித்தரும் என்று அறிவித்த திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்திற்கு "ஹட்கோ" அனுமதி வழங்கியுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதே கேள்வி நேற்று கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டு, பதில் சொல்லியிருக்கிறேன். அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்தக் குடியிருப்புகளைக் கட்டித் தர நடவடிக்கை எடுக்கும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதுபோல நேற்றே விரிவான விளக்கத்தை கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாகச் சொல்லிவிட்டார்கள். ஹட்கோ மூலம் கடன் பெறும் குடிசை மாற்று வாரியம், அப்படி வாங்கும் தொகையை எப்படி திருப்பிச் செலுத்துகிறது என்பதையும், இந்தத் திட்டத்தின்கீழ் அரசினுடைய உதவி எவ்வளவு, ஹட்கோ மூலம் பெற்றது எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்திற்கு ஹட்கோ கடனுதவி ஏறத்தாழ ரூ. 157 லட்சம் ஆகும். இதிலே அரசு மானியம் தருகிறது. மீதம் வீடு கட்டியதற்குப் பின்னாலே வசூல் செய்து அந்த கடன் திருப்பி அடைக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கித் திட்டத்தின்கீழ் மேம்பாடு மனை திட்டம் வழங்கப்படுகிறது. இந்த உலக வங்கி திட்டத்தின் மூலம் செயல்படுத்துகின்றபோது அந்த தொகை எவ்வாறு பெறப்பட்டு திருப்பிச் செலுத்தப்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நாளைக்கு மானியக் கோரிக்கை வருகிறது. அதிலே பேசுகிறபோது விரிவாகப் பேசி பதில் கூறலாம்.

தர்மபுரி மாவட்டத்தில் கிராம கூட்டுறவு வீடுகட்டும் திட்டம்

601—(* வினா எண் 9586) திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் பல வட்டங்களில் கிராம கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டு வீடுகட்டும் பணி நிதி வழங்காமையின் காரணமாக பூர்த்தி ஆகாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் வீடு கட்டுவதற்குக் கடன் அனுமதிக்கப்பட்டவர்களில் 1,271 உறுப்பினர்கள் முதல் அல்லது இரண்டாவது தவணையைப் பெற்றுக்கொண்டு கட்டிடப்பணியையே தொடங்காமலும், கட்டிடப்பணியை தொடங்கிய இனங்களில் கடனாகப் பெற்ற தொகையை அப்பணியில் முழுமையாகப் பயன்படுத்தாமலும் இருந்து வருவதனால் இவர்களுடைய வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்படாமல் உள்ளன.